புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • டிசம்பர் 28, 2023 • புரட்சி 23 • முழக்கம் 50 • விலை ரூ.3.00




# கழக வெளியீடுகளுக்கு ரூ.3 லட்சம் நன்கொடை

## கோபி இராம.இளங்கோவன் வழங்கினார்



*ஈரோடு வடக்கு மாவட்டக் கழகம் சார்பில் பெரியாரின் 50-வது நினைவு நாள் பொதுக்கூட்டம், 24.12.2023 அன்று மாலை 6.00 மணிக்கு குருவரெட்டியூர் பெரியார் திடல், தோழர் பிரகலாதன் நினைவரங்கில் சிறப்பாக நடைபெற்றது. ஈரோடு வடக்கு மாவட்டத் தலைவர் நாத்திகசோதி கூட்டத்திற்கு தலைமை வகிக்க, வேல்முருகன் வரவேற்புரையாற்றினார். மறைந்த தோழர் பிரகலாதன் படத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார். நிகழ்வின் தொடக்கத்தில் கோபி யாழ் திலீபன், அறிவுக்கனல் ஆகியோர் பாடல்கள் பாடினர். தலைமைக் கழகப் பேச்சாளர் கோபி வேலுச்சாமிக்கு அடுத்ததாகப் பேசிய, கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், திராவிடம் - சனாதனம் குறித்து உரையாற்றினார்.*

*அப்போது, தோழர்கள் கழக வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்ட இராம. இளங்கோவன், அதற்கு முன்னுதாரணமாக கழக நூல் வெளியீட்டு திட்டங்களுக்காக தனது தனிப்பட்ட நிதியாக ரூ. 3,00,000. (மூன்று இலட்சம் ) வழங்குவதாக அறிவித்து, தலைவர் கொளத்தூர் மணியிடம் தோழர்களின் பெருத்த கரவொலிக்கிடையே வழங்கினார். பெரியாரிய நூல்களை தேடித்தேடி படிக்கும் ஆர்வமுடையவர்கள் எண்ணிக்கை அதிகரித்து வருவதையும், சனாதன சக்திகளின் நெருக்கடிகள் முற்றிக்கொண்டிருப்பதையும் கருத்தில்கொண்டு வெளியீடுகளை அதிகரிக்க வேண்டிய இக்காலகட்டத்தில் இராம. இளங்கோவன் வழங்கியிருக்கும் இந்த நிதி கழகத்திற்குப் பேருதவி புரியும். அந்தவகையில் இராம. இளங்கோவன் வழங்கிய நன்கொடையை கழகத் தலைவர் மகிழ்வோடு பெற்றுக்கொண்டார்.*

*காணொளி மூலமாக தெருமுனை பரப்புரைகளை எடுத்துச்செல்ல உதவியாக, ரூ.80,000 மதிப்புள்ள காணொளிக் கருவிகளை வழங்கிய சிருவலூரைச் சேர்ந்த பொறியாளர் அருள்குமாருக்கு கழகத்தலைவர் பொதுக்கூட்ட மேடையில் நினைவுப்பரிசு வழங்கினார். கழகத்தின் சேலம் மாநில மாநாட்டிற்கு பெருந்தொகையை நன்கொடையாக வழங்கிய மருத்துவர் இராவணன், VAO செல்வம், குமார், இராமன் ஆகியோருக்கும் கழகத் தலைவர் நினைவுப்பரிசு வழங்கினார். அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் எழுதி, நிமிர்வோம் வெளியீடாக உருவாகியுள்ள* ***“பெரியார் மீது தூற்றும் புழுதி; அடித்து விரட்டும் ஆதாரங்கள்”*** *நூலை தமிழ்மண் தன்னுரிமை இயக்க நெறியாளர் பேராசிரியர் த.செயராமன் வெளியிட, ஈரோடு வடக்கு மாவட்ட கழகச் செயலாளர் செல்வக்குமார் பெற்றுக்கொண்டார்.*

*இந்நிகழ்வுகளைத் தொடர்ந்து த.செயராமனும், கழகத் தலைவர் கொளத்தூர் மணியும் விரிவாக கருத்துரையாற்றினர். பொதுக்கூட்டத்திற்கு கழக வெளியீட்டுச் செயலாளர் இராம. இளங்கோவன், தலைமைக்குழு உறுப்பினர் காவை.ஈசுவரன், ஈரோடு வடக்கு மாவட்டச் செயலாளர் செல்வகுமார், வடக்கு மாவட்ட அமைப்பாளர் நிவாசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். குருவரெட்டியூர், கோபி, சத்தியமங்கலம், காவலாண்டியூர், மேட்டூர் ஆகிய பகுதிகளிலிருந்து தோழர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.*

# பெரியார் தமிழுக்கு எதிரியா?

*1956ஆம் ஆண்டு டிசம்பர் 27-ஆம் தேதி தமிழ் ஆட்சிமொழி மசோதா சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை ஒட்டி, 28-ஆம் தேதி விடுதலையில் வெளியான தலையங்கம்...*

### “சட்டம் மட்டும் போதாது”

இனித் தமிழ்தான் ஆட்சி மொழியாயிருக்கும் என்று திரு. காமராசர் ஆட்சியின் முயற்சியினால் தமிழ்நாடு சட்டசபையில் சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டது. சட்டசபை உறுப்பினர்களையும் மந்திரி சபையையும் பாராட்டுகிறோம். இச் சட்டத்தை இக்கூட்டத் தொடரிலேயே நிறைவேற்ற வேண்டுமென்று பிடிவாதமிருந்த முதலமைச்சர் திரு. காமராசர் அவர்களையும் பாராட்டுகிறோம்.


ஆனால் இச்சட்டத்தை நிறைவேற்றினால் மட்டும் போதாது. இதை உடனடியாக நடைமுறையில் கொண்டுவர வேண்டும். நிர்வாகத்துக்குரிய எல்லா இங்கிலீஷ் சொற்களுக்கும் நேரான தமிழ்ச்சொற்கள் கிடைக்கும்வரையில் காத்திருக்க வேண்டியதில்லை. தெரியாத சொற்களை இங்கிலீஷிலேயே கலந்து எழுதலாம். இடைக்காலத்தில், ஒருசில மாதங்கள் வரையில், “மணிப்பிரவாள” நடையில் எழுதுவதனால் ஒன்றும் தவறில்லை. மனிதனின் கருத்தைத் தெரிவிப்பதற்குத்தானே மொழி? காஃபி, ஃபவுண்டன் பேனா, சைக்கிள், பேனா, டெலிபோன், காலெண்டர், மோட்டார் கார், ஃபோட்டோ, தர்மாஸ் ஃபிளாஸ்க் போன்ற பல சொற்களை இங்கிலீஷிலேயே எழுதலாம். இவைகளுக்கான தமிழ்ச்சொற்களை ஆராய்ந்து கற்பித்துக் கொண்டிருக்க வேண்டிய தேவையில்லை.

ஆனால் ஆட்சியாளர் உடனடியாக செய்ய வேண்டிய வேலைகள் சில உண்டு. இவைகளைப் பற்றி துறையூர் எம். எல்.ஏ. திரு ரெங்கசாமி ரெட்டியார் அவர்கள் நன்றாகத் தொகுத்து சட்டசபையில் கூறியிருக்கிறார்.

1. தமிழ் டைப்ரைட்டிங் வளர்ச்சி
2. தமிழ் சுருக்கெழுத்தாளர் பெருக்கம்
3. தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

இம்மூன்றையும் உடனடியாகக் கவனிக்காத வரையில் தமிழ் ஆட்சிமொழியாக வந்த பிறகு, நடைமுறையில் பல தொல்லைகள் ஏற்படும். இத்தொல்லைகளை அடிப்படையாக வைத்துக்கொண்டு, எதிரிகள் வேலை செய்வார்கள், விஷமஞ் செய்வார்கள்.

தமிழ் டைப்ரைட்டிங் இயந்திரங்களை திருத்தியமைத்தாலொழிய இங்கிலீஷைப்போல் நிமிஷத்துக்கு 40-50 சொற்கள் வீதம் விரைவாக அடிக்க முடியாது. இப்போதுள்ள டைப்ரைட்டருடைய “கீ போர்டை” (key board) திருத்தியமைக்க வேண்டும். இதற்கு முன்பாக, தமிழில் தேவையற்ற எழுத்துக்களாகிய ஐ,



போன்ற சுமார் 20 எழுத்துக்களை நீக்கிவிடலாம். இந்த எழுத்து மாற்றத்தை திரு அவிநாசிலிங்கனார் அவர்கள் அமைச்சராயிருந்தபோது, பல நிபுணர்களை கொண்ட ஆராய்ச்சிக்குழு ஒப்புக் கொண்டிருக்கிறது. அதன்படி பாடப்புத்தகங்கள் எழுதப்பட வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்பட வேண்டிய சமயத்தில், மந்திரி சபையில் மாற்றம் ஏற்பட்டது. அதற்குப்பிறகு வந்த மலையாளி கல்வியமைச்சர் இந்த முயற்சியைக் குப்பைத் தொட்டியில் எறிந்தார். அதற்குப் பிறகு வந்த அமைச்சர்களுக்கு இதுபற்றிய அறிவும் இல்லை; அக்கறையும் இல்லை.

“பெரியார் சொல்லி நாம் ஒப்புக் கொள்வதாவது? நம் படிப்பென்ன? பட்டமென்ன?” - என்ற அகம்பாவத்தினால் “அறிஞர்கள் ” என்று தங்களைத் தாங்களே அழைத்துக்கொண்ட கண்ணீர்த் துளிகள் இந்த எழுத்து மாற்றத்தை அன்றுமுதல் இன்றுவரையில் கேலி செய்து வருவதுபோல், ஆட்சியாளரும் அகம்பாவ உணர்ச்சிகொண்டு நடப்பார்களானால் தமிழ் வளர்ச்சிக்குத்தான் தடையே ஒழிய பெரியாருக்கோ அவரது கட்சிக்கோ எந்தவிதமான கஷ்டமமும் இல்லை.

“எப்பொருள் யார்யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு” என்ற குறள் இந்த அகம்பாவக் கூட்டத்துக்கு மண்டை கர்வம் படைத்த பட்டதாரி கூட்டத்துக்கு ஆகத்தான் எழுதப்பட்டிருக்கிறது என்று கருதுகிறோம்.

ஆதலால் தமிழ் எழுத்து மாற்றத்தை உடனடியாக கவனிக்க வேண்டுகிறோம். தமிழின் பிற்கால வளர்ச்சிக்கு இதுதான் அடிப்படை. “சு.மி” ஆசிரியர் திரு சி.ஆர். சீனுவாசன்; காலஞ்சென்ற திரு. கல்கி; திரு.ரா.பி. சேதுப்பிள்ளை; திரு.ஓமந்தூர் ரெட்டியார்; திரு.எஸ். குருசாமி- போன்ற பல கட்சித் தோழர்களைக் கொண்ட எழுத்து ஆராய்ச்சிக் குழுவில்தான் இந்த எழுத்து மாற்ற முடிவு செய்யப்பட்டது. (கண்ணீர் துளிகளில் ஒருவர்கூட இக்குழுவில் கலந்துகொள்ளவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.) ஆகையால் அந்த முடிவை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவந்து பாடப்புத்தகங்களில் மாறுதல் செய்ய வேண்டும்.

எழுத்துச் சீர்திருத்தம் நடந்த பிறகுதான் டைப்ரைட்டர்; டெலிபிரிண்டர்; மானோ டைப்; கம்போசிங்; தந்தி- ஆகிய துறைகளில் தமிழை கையாள முடியும். மண்டைக்கனம் பிடித்தவர்களுக்கும் படித்த “தற்குறிகளுக்கும்” இந்த எழுத்துச் சுருக்க பிரச்னை புரியாது. இதன் அவசியமும் புலனாகாது. தலைவர் பெரியார் அவர்கள் 30 ஆண்டுகளாக இதுபற்றி ஆராய்ச்சி செய்துள்ளார். பெரியார் அவர்கள், கவிஞர் திரு.பாரதிதான் அவர்கள், புலவர் வை.பொன்னம்பலம் அவர்கள் ஆகியோரிடம் நேரிற்கேட்டுத் தெரிந்துகொண்டால்தான் சிறிதாவது புரியும்.

இனி தமிழ் மொழி சுருக்கெழுத்துப் பற்றி ஒருவார்த்தை இத்துறையில் ஒரு பெரிய சதிவேலை நடந்து வருகிறது. இந்தத் தேர்வுக்கு 100 மாணவர்கள் சென்றால் இரண்டொருவருக்குத்தான் வெற்றி கிடைக்கிறது. காரணம் இன்றுள்ள சுருக்கெழுத்து முறையானது இங்கிலீஷ் (சுலோன்குப்ளயான்) முறையை பின்பற்றியதாயிருப்பதுடன் இதில் தேர்வு நடத்துகின்ற யாவரும் ஆரியர்களாகவே இருந்து வருகின்றனர்.

இனி இந்த பன்னாடை முறை ஒழிக்கப்பட வேண்டும். 100க்கு 30, 40 பேருக்காவது வெற்றி கிடைக்குமாறு செய்ய வேண்டும். புதிய சிறப்பான சுருக்கெழுத்து முறையை வகுக்க வேண்டும். தமிழாசிரியர்களுக்கு இந்த சுருக்கெழுத்து தேர்வை கட்டாயமாக்க வேண்டும்.

இங்கிலீசும் தமிழும் நன்றாக படித்துத் தேர்ந்தவர்களையே சர்க்கார் பணிமனைகளில் எழுத்தாளர்களாக நியமிக்க வேண்டும். விரிவான தமிழ்ப் படிப்புள்ள தமிழர்களான வக்கீல்களைக் கொண்டு நல்ல இங்கிலீஷ் நூல்களையெல்லாம் தமிழில் மொழிபெயர்க்கச் செய்ய வேண்டும். இதற்காக தனி இலாகாவை ஏற்படுத்த வேண்டும்.

இம்மாதிரி முறைகளை அவசரமாகக் கையாளாவிட்டால் நேற்று நிறைவேற்றப்பட்ட சட்டம் வெறும் ஏட்டுச் சுரைக்காயாகத்தானிருக்கும்.

விடுதலை - 18.12.56

## தலையங்கம்

# பெரியாரின் சுற்றுப்பயணம் முடியவில்லை!

1973-ஆம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் தேதி, வேலூர் சி.எம்.சி. மருத்துவமனையில் தந்தை பெரியாரின் உயிர் பிரிந்தபோது "பெரியார் தனது சுற்றுப்பயணத்தை நிறுத்திக்கொண்டார்" என இரங்கற்பா எழுதினார் கலைஞர். பெரியாரின் உடல் மட்டும்தான் அப்போது இயக்கத்தை நிறுத்திக்கொண்டதே தவிர, அவரது சிந்தனைகளும் தத்துவங்களும் இன்னமும் சூறாவளி போலச் சுற்றிக்கொண்டே இருக்கிறது. போர்க்களத்தில் எதிரியிடம் இருந்து தற்காத்துக்கொள்ள கேடயமும், எதிரியைத் திருப்பித் தாக்குவதற்கு வாளும் வைத்திருப்பார்கள். ஆனால் தமிழ்நாட்டுக்கு களம் எதுவானாலும் கேடயமும் பெரியார்தான், வாளும் பெரியார்தான். பெரியாரை முன்னிறுத்தித்தான் தமிழ்நாட்டின் போராட்டக் களங்கள் வடிவமைக்கப்படுகின்றன. பெரியாரைத் துணைகொண்டுதான் தமிழ்நாட்டின் உரிமைக் குரல்கள் எழுப்பப்படுகின்றன.

நூறாண்டுகளுக்கு முன் பெரியார் சுயமரியாதை இயக்கத்தை தோற்றுவிக்கும் போது இங்கு படித்தவர்கள் நூற்றுக்கு 10 பேர் கூட இல்லை. ஆனால் இன்றைக்கு படிக்கச் செல்லாதவர்கள் நூற்றுக்குப் பத்து பேர் கூட இல்லை என்ற தலைகீழ் மாற்றத்தை கண்டிருக்கிறோம். கல்வியில், ஆராய்ச்சியில், கட்டமைப்பு வளர்ச்சியில், பொருளாதார தன்னிறைவில் என ஒவ்வொரு துறையிலும் தன்னிகரில்லாத மாநிலமாக தமிழ்நாடு வளர்ந்திருக்கிறது. வகுப்புரிமையை முன்வைத்து வருண பேதங்களை ஒழித்துக்கட்ட வாழ்நாளெல்லாம் போராடிய பெரியாரும், அவர் உருவாக்கி, அவர் வழியில் நடைபோடும் திராவிட இயக்கமும்தான் தமிழ்நாட்டின் இத்தனித்துவமான வளர்ச்சிக்கு காரணம் என்று பொருளியல் அறிஞர்கள் பலரும் கூறுகிறார்கள். வளர்ச்சி கோட்பாட்டுக்கு நேரெதிரான பழமைவாதிகளின் வீழ்ச்சிக்கும் அவரே காரணமாக இருக்கிறார் என்பதால்தான், மறைந்து 50 ஆண்டுகளுக்குப் பிறகும் பெரியாரை சீரணிக்கவோ, விழுங்கவோ முடியாமல் அவர் மீது முட்டி முட்டி மோதி மூக்குடைந்து வீழ்ந்து கொண்டிருக்கிறது பார்ப்பனியம்.

சிபிஐ, அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, தேர்தல் ஆணையம், நீதிமன்றங்கள், ராணுவம் என இந்த நாட்டின் உச்சபட்ச அதிகாரம் கொண்ட அமைப்புகள், படைகளை ஒட்டுமொத்தமாகக் கையில் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சிகளையும் நாட்டு மக்களையும் நினைத்தபடி பந்தாடும் பாரதிய ஜனதா அரசாலும், அதனை ஆட்டுவிக்கும் ஆர்.எஸ்.எஸ்.ஸாலும் தொட்டுப் பார்க்கக் கூட துணிவில்லாத பெரும் நெருப்பாக பெரியார் இருக்கிறார். நாடாளுமன்றத்தில் பெரியார் பெயரை எவரேனும் உச்சரித்துவிட்டால் இப்போதும் பதற்றமடைந்து அவைக்குறிப்பில் இருந்தே நீக்குகிறார்கள், "பெரியார் சிலையை உடைப்பேன்" என்று ஆணவத்திலோ, அரைவேக்காடு புரிதலிலோ அல்லது அறிவுப் போதாமையிலோ பேசிவிட்டால் ஒருநாள் கூட தாக்குப்பிடிக்கும் துணிச்சல் இருப்பதில்லை, மறுநாளே மண்டியிடுகிறது மதவாதக் கூட்டம். "கடவுள் இல்லை, கடவுள் இல்லவே இல்லை, கடவுளை கற்பித்தவன் முட்டாள், பரப்புகிறவன் அயோக்கியன், நம்புகிறவன் மடையன்" என்று முழங்கிய பெரியார்தான் எங்கள் வாழ்வின் வெளிச்சத்திற்குக் காரணம் என நெற்றியில் திருநீறும், பட்டையும் இட்ட பழுத்த பக்தர்களும் பேசுவதைப் பார்த்து அஞ்சுகிறது ஆரியக் கூட்டம்.

மறைந்து அரை நூறாண்டுகளுக்குப் பிறகும் இப்படி அச்சுறுத்தும் ஒரு தலைவரை உலகில் வேறெந்த நாட்டிலும் எந்த எதிரிகளும் பெற்றிருக்க மாட்டார்கள். அப்படியொரு தனித்துவம் உலகிலேயே பெரியாருக்கு மட்டும்தான் வாய்த்திருக்கிறது. செத்துப்போய் 50 வருடங்கள் ஆகிவிட்ட கிழவன் எப்படி இந்த ஆரிய கூட்டத்தை அச்சுறுத்துகிறார், பதற்றமடைய வைக்கிறார் என தேடித்தேடிப் படிக்கிறது இளைஞர் கூட்டம். புத்தகக் காட்சிகளில் விற்பனையில் முதலிடம் பிடித்து விடுகிறார். மாதத்திற்கு ஒருமுறையேனும் சமூக வலைத்தளங்களில் டிரெண்டிங்கில் வந்துவிடுகிறார். பெரியாரை பார்த்தே இராத, பெரியார் மறைந்து 10, 20 வருடங்கள் கழித்துப் பிறந்த ஒரு தலைமுறையின் கையில் தத்துவமாய் தவழ்ந்து கொண்டிருக்கிறார். பெற்றோரை விட பெரியாரை அதிகம் நேசிக்கிற படித்த இளம்பெண்களின் எண்ணிக்கை புற்றீசல் போல அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.


மொபைல் போன், வீடியோ கால் வசதிகள், சோதனைக்குழாய் குழந்தை என இன்றைய நவீன உலகில் சர்வ சாதாரணமாகிவிட்ட இவையெல்லாம் ஒருகாலத்தில் வந்துவிடும் என, தான் 80 ஆண்டுகளுக்கு முன்னரே கணித்துக் கூறியவர் பெரியார். அத்தகைய தொலைநோக்கு சிந்தனை கொண்ட பெரியாரின் கணிப்புகளில் ஒன்று மட்டும் பொய்த்துவிட்டது. பெரியார் என்ற மூடக்காரன் முன்னொரு காலத்தில் இருந்தான் என்று பேசும் அளவுக்கு 50 வருடங்கள் கழித்து வரும் மக்கள் முன்னேறி இருப்பார்கள் என்றார். ஆனால் ஆரிய அழிவு சக்திகள் நம்முடைய உரிமைகளை ஒவ்வொன்றாக பறித்துக் கொண்டிருக்கிற இந்த காலத்தில்தான், பெரியார் வாழ்ந்த காலத்தில் தேவைப்பட்டதை விட அதிகம் தேவைப்படுகிறார். எனவே, பெரியாருடைய எழுத்துக்களும் சிந்தனைகளும் கொள்கைகளும் எவர் தடுத்தாலும் நிற்கப்போவதில்லை. உரிமைகள் மறுக்கப்பட்ட, அடிமை விலங்கிடப்பட்ட கடைசி மனிதன் இருக்கும் வரை பெரியாரின் சிந்தனைகளும், எழுத்துக்களும், பேச்சுக்களும் சுற்றிக்கொண்டே இருக்கும். அதை எவர் தடுத்தும் நிறுத்த முடியாது. அதுவரை பெரியாரின் சுற்றுப்பயணமும் முடியாது.

## கழகத் தலைவரிடம் வாழ்த்து

தமிழ்நாடு - புதுச்சேரி பார் கவுன்சிலில் வழக்கறிஞராக பதிவு செய்திருக்கும் தோழர் லாவண்யா 21.12.2023 வியாழனன்று கழகத் தலைமை அலுவலகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணியை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

அதன் மகிழ்வாக கழக ஏடான "புரட்சிப் பெரியார் முழக்கம்" இதழ் வளர்ச்சி நிதியாக ரூ.2000/- வழங்கினார்.

## நாட்காட்டி தயார்!







*திராவிடர் விடுதலைக் கழகத்தின் 2024 ஆண்டிற்கான நாட்காட்டி தயார்! விலை : ரூ.70 (ரூபாய் எழுபது மட்டும்) + அஞ்சல் செலவு தனி*

*குறைந்த எண்ணிக்கையிலேயே நாட்காட்டி அச்சிடப்படுவதால் தேவைப்படும் தோழர்கள் விரைந்து முன்பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.*

*முன்பதிவிற்கு,*
*தபசி குமரன்,*
*தலைமை நிலையச் செயலாளர்,*
*9941759641*

## சந்தாக்களை விரைந்து அனுப்புங்கள்!

2024 ஜனவரி 15 முதல் அடுத்த ஆண்டுக்கான "பெரியார் முழக்கம்" சந்தா புதுப்பிக்கப்பட உள்ளதால், கழகத் தோழர்கள் மாவட்ட வாரியாக புதிய சந்தாக்களை விரைவாக 8973341377 என்ற எண்ணிற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

*விடுதலை இராசேந்திரன், ஆசிரியர்*
*புரட்சிப் பெரியார் முழக்கம்*

## வினா விடை

• *தமிழ்நாட்டில் சென்னையிலும், தென் மாவட்டங்களிலும் பெய்த மழையை தேசியப் பேரிடர் என்று அறிவிக்க முடியாது*
***– நிர்மலா சீதாராமன்***

**பதில் :** *ஆமாம், பா.ஜ.க இருக்கும்போது வேறு எதையும் தேசியப் பேரிடர் என்று சொல்வது சரியாக இருக்காது தான்.*

• *வட இந்தியாவில் தமிழைப் பரப்ப நாம் இந்தி கற்க வேண்டும்*
***– தமிழிசை***

**பதில் :** *இந்தி கற்றுக்கொண்ட பிறகு தமிழ் இங்கு எப்படி இருக்கும்? தலை வலிக்கு மருந்து கேட்டால், நன்றாக இருக்கும் காலுக்கு மருந்து கொடுக்கலாமா மருத்துவரே!*

• *பிரிட்டிஷ் கால சட்டங்கள் இல்லாத புதிய இந்தியாவை படைத்துவிட்டோம்*
***– அமித் ஷா***

**பதில் :** *ஆளுநர் பதவி என்ன ராம ராஜ்ஜியத்தில் உருவாக்கப்பட்டதா? அதையும் அழித்து இன்னொரு புதிய இந்தியா பிறந்தால் என்ன கெட்டுவிடும்?*

• *ஜாதிவாரி கணக்கெடுப்பு தேவையில்லை என்று சொல்லவில்லை. ஆனால் அப்படி கணக்கெப்பு நடத்துவதால் சமூக பதற்றம் ஏற்படாதவாறு, ஒற்றுமையை உறுதிசெய்ய வேண்டும்*
***– ஆர்.எஸ்.எஸ்.***

**பதில் :** *ஆர்.எஸ்.எஸ்-ஐ தடை செய்ய வேண்டும் என்று சொல்கிறார்களோ!*

• *பொன்முடி போல மேலும் 11 அமைச்சர்கள் மீதான ஊழல் வழக்குகளில் மிக விரைவில் தீர்ப்பு வரும்*
***– அண்ணாமலை***

**பதில் :** *கமலாலயத்தில் இருந்து தீர்ப்பை எழுதி அனுப்பி வைத்துவிட்டு காத்திருக்கிறீர்களோ!*

# பாஜகவின் மோசடிகளை தோலுரிக்க பெரியார் தேவைப்படுகிறார்



**ஆளூர் ஷா நவாஸ்**

*தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு வட சென்னை மாவட்டக் கழகம் சார்பில் 20.12.2023 புதன்கிழமை புரசைவாக்கம் தாணா தெருவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் விசிக துணைப் பொதுச்செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆளூர் ஷா நவாஸ் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உரை பின்வருமாறு :-*

நினைவுநாள் என்பது வருடத்தில் ஒருநாள், ஆனால் நினைவுநாளில் மட்டும் நினைவுகூறப்பட வேண்டிய தலைவரல்ல பெரியார். எந்நாளும் நமக்கு அவருடைய நினைவுநாள்தான். பெரியாரை நீக்கிவிட்டு அல்லது பெரியாரை மறந்துவிட்டு அல்லது பெரியாரை நினைக்காமல் இருந்துவிட்டு நம்மால் இந்த சமூகத்தில் நடமாடவே முடியாது. அந்தளவுக்கு இங்கு மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு மகத்தான தலைவர் பெரியார். அவரைப் பற்றிய எதிர்மறையான கருத்துக்கள், அவதூறுகள், போலியான சித்தரிப்புகள் என இவற்றின் ஊடாக நாளுக்கு நாள் பெரியார் அதிகம் வாசிக்கப்படுகிறார். நினைவுகூறப்படுகிறார், இந்த தலைமுறையின் மத்தியில் அவர் உயர்ந்து கொண்டே செல்கிறார். அப்படிப்பட்ட ஈர்ப்பு சக்தி கொண்ட ஒரு தலைவர் பெரியார்.


காந்தியை எதிர்த்தார், ஆனால் காந்தி படுகொலை செய்யப்பட்டபோது, இந்த நாட்டிற்கு "காந்தி தேசம்" என்றுபெயர் சூட்டுங்கள்என்றார்.காங்கிரசில்இருந்து வெளியேறினார், பின்னாளில் காமராசர் ஆட்சிக்கு வர வேண்டுமென்று காங்கிரஸை ஆதரித்தார். அரசியலமைப்பை இயற்றிய அம்பேத்கரை போற்றினார், அதேநேரம் அரசியலமைப்புச் சட்டத்தை கொளுத்தும் போராட்டம் நடத்தினார். முதலில் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்தார், பின்னர் விடுதலை நாளை "துக்க நாள்" என்று அறிவித்தார். தமிழை காட்டுமிராண்டி மொழி என்றும் விமர்சித்திருக்கிறார், எழுத்துச் சீர்திருத்தத்தையும் அவர்தான் செய்தார். திருக்குறள் மாநாடு நடத்தி இருக்கிறார், திருக்குறளில் சில கூறுகளை விமர்சித்தும் இருக்கிறார். இதையெல்லாம் மேலோட்டமாகப் பார்க்கிறவர்களுக்கு பெரியார் முரண்பாடுகளின் மொத்த உருவமாகத் தோன்றலாம்.

ஆனால் பெரியார் ஏன் காங்கிரசை எதிர்த்தார், சுயநலத்தின் காரணமாகவா? பின்னர் காங்கிரசை ஏன் ஆதரித்தார் சுயநலத்தின் காரணமாகவா? ஏன் தமிழ்மொழியின் மீது விமர்சனத்தை முன் வைத்தார்? தமிழ் மீதான வெறுப்பிலா? ஏன் திருக்குறளில் மாற்றுக் கருத்தை முன் வைத்தார்? திருவள்ளுவரை பிடிக்காமலா? இவை அனைத்திலும் பெரியாரிடம் அடிப்படையாக அமைந்தது மானுட நேயம், மனிதநேயம், சமத்துவம், சமூகநீதி. சமத்துவத்துக்கும், சமூகநீதிக்கும் எந்தக் கோட்பாடு சிக்கலாக அமைந்தாலும் அவற்றுக்கு எதிராக இருந்தார் பெரியார். இதுதான் பெரியாரின் அடிப்படை. அவர் மிகச்சிறந்த ஜனநாயகவாதியாக, மனிதநேயவாதியாக, மிகச்சிறந்த ஆதிக்க எதிர்ப்பாளராக விளங்கினார். அதனுடைய வெளிப்பாடுகள் தான் இவை.

பெரியார் பேசியகருத்துகள்வெளிப்படையானவை, எந்த கருத்தையும் பேச அவர் அஞ்சியதில்லை. இதைத்தான் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு சொன்னார். அந்தளவுக்கு வெளிப்படைத்தன்மை, கொள்கையில் உறுதித் தன்மை கொண்டவர் பெரியார். அந்த கொள்கை உறுதிதான் தமிழ்நாட்டை மட்டுமல்ல, வட இந்தியாவையும் இன்றைக்கு பெரியாரைத் திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. இறை நம்பிக்கைக் கொண்டவர்கள் கூட, சமயங்களைக் கடந்து பெரியாரைத் தலைவராக ஏற்றுக்கொண்டு களத்திற்கு வருகிறார்கள். சங்கிகள் பெரியார் சிலையை அவமதித்தால் அய்யப்பனுக்கு மாலை போட்ட பக்தர், அந்த சங்கியின் சட்டையைப் பிடித்துக் கேள்வி கேட்கிறார். அந்தளவுக்கு எல்லா இடத்திலும் பெரியாரின் தாக்கம் இருக்கிறது.

1971-இல் சேலத்தில் நடந்த திராவிடர் கழக ஊர்வலத்தில் இராமனுக்கு பெரியார் செருப்பு மாலை போட்டார் என்ற ஒரு சர்ச்சை 2 ஆண்டுகளுக்கு முன்பு கிளப்பப்பட்டது. அதுகுறித்து ரஜினிகாந்த் ஒரு கருத்தைக் கூறி பிரச்னை வெடித்தது. அதுகுறித்து சபரிமலைக்கு சென்றுவந்த ஓ.பன்னீர் செல்வத்திடம் கேட்டபோது "பெரியார் இல்லையென்றால் நாங்கள் குப்பையில்தான் கிடந்திருப்போம். நாங்கள் இப்போது கோபுரத்தில் இருக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் பெரியார்." என்று பதிலளித்தார். மதுரையில் பேட்டி அளித்த செல்லூர் ராஜு "ரஜினிகாந்தின் மகளுக்கு மறுமணம் நடந்ததே, அது பெரியார் கொள்கையின் வெளிப்பாடு" என்று பதிலளித்தார். தீவிர கடவுள் நம்பிக்கையாளர்களான ஓ.பன்னீர் செல்வமும், செல்லூர் ராஜுவும் பெரியார் குறித்து பேசுகிறார்கள் என்றால் அதுதான் பெரியாருக்கு கிடைத்த வெற்றி.

ஒருகாலத்தில் முன்னேறிய சமூகத்தினர் மட்டுமே கோலோச்சிய உணவகத் துறையில் இன்று எல்லா சமூகத்தினரும் இருக்கிறார்கள் என்றால் அதற்குப் பெரியார்தான் காரணம் என அடையாறு ஆனந்தபவன் உரிமையாளர் கூறியதை வைத்து சங்கிகள் சர்ச்சையைக் கிளப்பினார்கள். சேலம் ஆர். ஆர். பிரியாணி உரிமையாளரும் பெரியாரைப் பற்றி பேசுகிறார். "நான் கடவுளை வணங்குபவன், ஆனால் பெரியாரையும் மதிப்பவன்" என்று இரண்டையும் சேர்த்தே சொல்லக்கூடிய பண்பு இங்கு மட்டும்தான் இருக்கிறது. ஆக, பெரியார் தனி மனிதரல்ல, தத்துவம். வாழ்ந்த காலத்தில் தேவைப்பட்டதை விட இன்றைக்கு அதிகம் தேவைப்படுகிறார்.



மீண்டும் பாஜக ஆட்சிக்கு வந்தால் நாடாளுமன்றம் இருக்காது. எதிர்க்கட்சிகள் இருக்காது. தேர்தலே நடக்காது என்று நாம் பேசிவருகிறோம். அது உண்மை என்பதை கடந்த ஒருவார நிகழ்வுகள் நிரூபித்துவருகிறது. நாடாளுமன்றம் கட்டடமாக உள்ளது. ஆனால் நாடாளுமன்றத்துக்குள்ளே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இல்லை, வெளியேற்றப்படுகிறார்கள். இப்படி இந்திய ஜனநாயக வரலாற்றில் கொத்துக் கொத்தாக, காரணமே இல்லாமல் உறுப்பினர்களை இடைநீக்கம் செய்த வரலாறே கிடையாது. அவைக்கே வராத எம். பி.க்களை கூட சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். இதுவே ராகுல் காந்தி பிரதமராக இருந்து, மோடி எதிர்க்கட்சி தலைவராக இருந்து, 180 பா.ஜ.க எம். பி.க்களை காங்கிரஸ் சஸ்பெண்ட் செய்திருந்தால் இந்தியாவில் விவாதம் எப்படி நடந்திருக்கும். ஆனால் இப்போதோ பேரமைதி!

> **அருந்ததியரில் இருந்து ஒருவருக்கு பாஜகவில் பொறுப்பு கொடுத்துவிட்டு, திமுகவில் இப்படி கொடுக்க முடியுமா என்று கேட்கிறார்களே! ஒட்டுமொத்த அருந்ததிய மக்களுக்கு 3% இடஒதுக்கீடு கொடுத்தது யார்? திமுகதானே! அதுதானே முக்கியம்?**

மோடி அரசின் அராஜகப் போக்குகளை கட்டுப்படுத்த வேண்டிய நீதிமன்றங்களோ, ராமர் கோயில் கட்ட அனுமதி, காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து நீக்கம் என ஒன்றிய அரசின் சர்வாதிகாரப் போக்கை அங்கீகரிக்கிறது.. இவையெல்லாம் புதிதாக நடப்பதல்ல, இதை சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பே எச்சரித்து சென்ற தலைவர்தான் பெரியார். சமீபத்தில் நடந்துமுடிந்த ஐந்து மாநிலத் தேர்தல்களில் பாஜக 3 மாநிலங்களில் வென்றது. வழக்கமாக ஆட்சிக்கு வந்த கட்சியினர், அந்த மாநிலத்தில் யார் அவர்களுக்கு வலிமையான செல்வாக்குப் பெற்ற முகமாக அல்லது யாருடைய தலைமையின் கீழ் அவர்கள் தேர்தலை சந்திக்கின்றனரோ, அவர்களைத்தான் முதலமைச்சராக்குவார்கள். ஆனால் பாஜக மத்தியப்பிரதேசத்தில் சிவராஜ் சிங் சவுகானை ஓரம்கட்டிவிட்டு புதிதாக ஒருவரை (மோகன் யாதவ்) முதலமைச்சராக்கிவிட்டது. சட்டிஸ்கர், ராஜஸ்தானிலும் அதே நிலைமை தான்.

ஏற்கனவே குடியரசுத் தலைவராக பழங்குடியினத்தவர், அதற்கு முன்னதாக பட்டியலினத்தவர், பிரதமராக இருக்கும் மோடி பிற்படுத்தப்பட்டவர், தமிழ்நாட்டில் இருந்து அருந்ததிய சமூகத்தவர் ஒன்றிய இணை அமைச்சர் என இதையெல்லாம் செய்துவிட்டு நாங்கள் தான் சமூகநீதி வழங்கியுள்ளோம் என்கின்றனர். இது வேறு எந்த கட்சியிலாவது சாத்தியமா என்று தோண்றலாம். பாஜக முன்வைக்கும் அரசியல் என்பது Social Justice Politics (சமூகநீதி அரசியல்) அல்ல, Social Engineering Politics (ஜாதி அடிப்படையிலான கட்டுமானம்) ஆகும்.

காங்கிரஸ் ஆட்சியின் முதல் அமைச்சரவையில் அம்பேத்கருக்கு சட்ட அமைச்சர் பொறுப்பை வழங்கியதுடன், சட்ட வரைவுக் குழு தலைவர் பொறுப்பும் வழங்கப்பட்டது. தனிப்பட்ட முறையில் பார்த்தால் அம்பேத்கருக்கு ஒரு கண்ணியத்தை காங்கிரஸ் வழங்கிவிட்டது. பெரியாரும் கூட காங்கிரஸில் தலைவராக இருந்தார். அதுதான் பாஜக சொல்கிற சோசியல் எஞ்சினியரிங். ஆனால் தனக்குப் பதவி கிடைக்கவில்லை என்பதற்காக பெரியார் காங்கிரஸில் இருந்து வெளியேறினாரா? தனக்கு உரிய அங்கீகாரம் இல்லை என்று அம்பேத்கர் சட்ட அமைச்சர் பொறுப்பை துறந்து வெளியே வந்தாரா? இந்த சமூகத்திற்கு அதிகாரம் கிடைக்கவில்லை என்பதற்காக வெளியே வந்தார்கள். அப்படியானால் பாஜக முன்வைக்கிற சோசியல் எஞ்சினியரிங்கிற்கு எதிரானவர்கள் புரட்சியாளர் அம்பேத்கரும் தந்தை பெரியாரும். பாஜக இன்றைக்கு ஒரு சோசியல் இஞ்சினியரிங்கை செய்துவிட்டு இதுதான் சோசியல் எஞ்சினியரிங் என்று சொல்கிறதே, அந்த இடத்தில்தான் இது மோசடி என்று பெரியார் நினைவுகூறப்படுகிறார்.

இந்த சமூகங்களை அதிகாரப்படுத்துவதற்கு என்ன வைத்திருக்கிறாய் என்று பாஜகவிடம் கேட்கிறோம். பட்டியலினத்து மக்களை அதிகாரப்படுத்துவதற்கு பாஜக என்ன உத்தி வைத்திருக்கிறது? அதற்காக வரையறுக்கப்பட்டிருக்கிற திட்டங்களை பாஜக ஆதரிக்கிறதா? குரல் கொடுத்திருக்கிறதா? தமிழ்நாட்டில் நடைமுறையில் இருக்கும் 69% இடஒதுக்கீட்டில் பாஜகவின் பங்கு என்ன? இந்த இடஒதுக்கீட்டை அதிகப்படுத்த வேண்டும் என்று நாம் சொல்கிறோம், பாஜக சொல்லுமா? அருந்ததியரில் இருந்து ஒருவரைப் பிடித்து வந்து பாஜகவில் பொறுப்பு கொடுத்துவிட்டு, திமுகவில் ஒரு அருந்ததியர் தலைவராக முடியுமா என்று கேட்கிறார்களே! ஒட்டுமொத்த அருந்ததிய மக்களுக்கு 3% இடஒதுக்கீடு கொடுத்தது யார்? திமுகதானே?? இதுதானே முக்கியம். ஆனால் அவர்கள் அரசியலை எப்படி மடைமாற்றுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

பெரியார் ஏன் நினைவுகூறப்பட வேண்டும்? பெரியார் ஏன் திரும்பத் திரும்ப பேசுபொருளாக வேண்டுமென்றால், அவரின் வாழ்க்கையே சாட்சியாக இருக்கிறது. தனிமனிதர்களுக்கு அதிகாரம் கொடுப்பது அல்ல, சமூகங்களை அதிகாரப்படுத்த வேண்டும். பெரியாரும் அம்பேத்கரும் அதற்கு சாட்சியாக இருக்கிறார்கள். அந்த அடிப்படையில்தான் பாஜகவின் இந்த சதித் திட்டங்களை அம்பலப்படுத்துவதற்கு பெரியாரை நாம் மீண்டும் மீண்டும் நினைவுகூற வேண்டும். இதெல்லாம் ஏமாற்று வேலை, அவர்கள் சமூகத்தை அதிகாரப்படுத்துவதற்கு போராடவில்லை. ஆனால் இந்த மக்களை திருப்திப்படுத்தினால்தான் அரசியல் செய்ய முடியும் என்ற இடத்துக்கு பாஜக வந்திருக்கிறது, ஒடுக்கப்பட்ட சமூகங்களில் இருந்தும் அடையாளங்களை காட்டினால்தான் வாக்கு வாங்க முடியும் என்ற இடத்துக்கு பாஜக வந்திருப்பது நமக்கு வெற்றிதான் என்றாலும், அது ஏமாற்று வேலை. வெறும் தனிநபருக்கு அதிகாரம் கொடுப்பது அல்லது நமது போராட்டம், சமூகத்தை அதிகாரப்படுத்துவதுதான் நமது போராட்டம். அதில் பாஜக எங்குமே வராது.

தொடரும்

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# பெரியார் நினைவுநாள்; கழகத்தின் சார்பில் மரியாதை

**தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு கழக சார்பில் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அது பின்வருமாறு:-**

**சென்னை :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு சென்னை மாவட்டக் கழக சார்பில் இராயப்பேட்டை, சிம்சன், எம்ஜிஆர் நகர், தியாகராயர் நகர், மயிலாப்பூர், கலைஞர் கருணாநிதி நகர், நங்கநல்லூர், பிவி நகர், சேத்துப்பட்டு உள்ளிட்ட இடங்களில் கழகம் சார்பில் பெரியார் சிலைகளுக்கு மாலை அணிவித்து கொள்கை முழக்கங்கள் எழுப்பி மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் சுகுமார் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக பொறுப்பாளர்கள், கழகத் தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**கோவை :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு கோவை மாவட்டக் கழக சார்பில் காந்திபுரம் பெரியார் சிலைக்கு கழகத் தோழர் கண்ணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து பீளமேடு, சித்தாபுதூர் பகுதிகளில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெரியாரின் உருவப்படங்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

**பொள்ளாச்சி :** பொள்ளாச்சி கழகம் சார்பில் தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு பொள்ளாச்சி நகர பேருந்து நிலையம் முன்பு அமைக்கப்பட்டிருந்த பெரியார் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் திராவிடர் கழகம், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தோழர்கள் பங்கேற்றனர்.

**தஞ்சாவூர் :** தந்தை பெரியாரின் 50வது நினைவு நாளை முன்னிட்டு பேராவூரணியில் உள்ள பெரியார் சிலைக்கு 24.12.2023, காலை 10 மணிக்கு நகர கழக அமைப்பாளர் கலைச்செல்வன் தலைமையில் கழகப் பரப்புரைச் செயலாளர் பால் பிரபாகரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

நிகழ்வில் பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார், மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம், ஒன்றிய செயலாளர் உதயகுமார், மற்றும் தோழமை இயக்கத்தினர் பங்கேற்றனர்.

**கோபி :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு கோபி பெரியார் திடலில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு கழக வெளியீட்டுச் செயலாளர் இராம.இளங்கோவன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**சத்தியமங்கலம் :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு சத்தியமங்கலம் பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியாரின் உருவப்படத்திற்கு கழகம் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

**காஞ்சிபுரம் :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு காஞ்சி மாவட்டக் கழக சார்பில் காஞ்சி சங்கர மடம் முன்பு உள்ள பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**கள்ளக்குறிச்சி :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு கடுவனூர், ரிஷிவந்தியத்தில் அமைந்துள்ள பெரியார் சிலைகளுக்கு கள்ளக்குறிச்சி மாவட்டக் கழக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**திருப்பூர் :** பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு திருப்பூர் மாவட்டக் கழக சார்பில் திருப்பூர் ரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள பெரியாரின் சிலைக்கு கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவரும் ஜாதி ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

**வேலூர் :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு ஒருங்கிணைந்த வேலூர் மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் சிவா தலைமையில் குடியாத்ததில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து பேர்ணாம்பட்டு, திம்மம்பேட்டை, பூசாரவலசையில் கழகம் சார்பில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெரியார் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து வீரவணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்வில் கழகத் தோழர் வினோத் அவர்களின் மகள் நவீராவின் முதல் பிறந்தநாளை ஒட்டி கழக வளர்ச்சி நிதியாக ரூ.1500/- வழங்கினார். நெமிலியில் மாவட்டத் தலைவர் திலீபன் தலைமையிலும், ஆற்காட்டில் பாஸ்கர் தலைமையிலும் மரியாதை செலுத்தப்பட்டது.

**மதுரை :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு மதுரை மாவட்டக் கழக சார்பில் தல்லாக்குளம் பகுதியில் அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

**ஈரோடு வடக்கு :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழக சார்பில் ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள பெரியாரின் சிலைக்கு கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து மரப்பாலம், கல்லுக்கடை, ஆலமரத்து தெரு உள்ளிட்ட இடங்களில் எது திராவிடம்? எது சனாதனம்? தெருமுனைக் கூட்டங்கள் நடைபெற்றது. இதில் கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி, மாவட்டச் செயலாளர் எழிலன், மாநகர அமைப்பாளர் குமார், பொருளாளர் கிருஷ்ணன், கணேஷ், சத்தியமூர்த்தி, திருமுருகன், பரப்புரைச் செயலாளர் வேணுகோபால், கமலி, விருதுநகர் செந்தில், பெருந்துறை பழனிசாமி, கணேஷ், மகிழவன், அய்யப்பன், முத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர். பொதுமக்கள் ரூ.1280/- நன்கொடை வழங்கினர்.

## பேராவூரணியில் பெரியார் நினைவுநாள் கருத்தரங்கம் பெரியார் முழக்கத்திற்கு ரூ.15,000 நன்கொடை

**தஞ்சாவூர் :** பேராவூரணி சேதுபாவாசத்திரம் கழக சார்பில் தந்தை பெரியார் 50வது நினைவு நாள் - புரட்சியாளர் அம்பேத்கர் 67வது நினைவு நாள் - வைக்கம் போராட்ட நூற்றாண்டு எது திராவிடம்? எது சனாதனம்? கருத்தரங்கம் பேராவூரணி பேரூராட்சி திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

தஞ்சை மாவட்ட அமைப்பாளர் திருவேங்கடம் தலைமை வகிக்க, பேராவூரணி ஒன்றிய செயலாளர் உதயகுமார் வரவேற்புரையாற்றினார். பாடகர் பள்ளத்தூர் நாவலரசன் பகுத்தறிவு பாடல்களுடன் கருத்தரங்கம் தொடங்கியது.

தமிழக மக்கள் புரட்சிக் கழக ஆறு நீலகண்டன், காங்கிரஸ் சேக் இப்ராம்சா, சிபிஐ பன்னீர்செல்வம், மதிமுக பாலசுப்பிரமணியன், விசிக ஆத்ம ஆனந்தகுமார், அறநெறி மக்கள் கட்சி ஆயர் த.ஜேம்ஸ் மற்றும் பேராசிரியர் சண்முகப்பிரியா, கழக நகரச் செயலாளர் தா. கலைச்செல்வன், கழக மாவட்டச் செயலாளர் பாரி, தலைமைக்குழு உறுப்பினர் அய்யனார் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

தொடர்ந்து “பெரியாரும் திருக்குறளும்” என்ற தலைப்பில் தமிழ் வழிக் கல்வி இயக்கத்தின் தலைவர் சின்னப்பத்தமிழரும், “எது திராவிடம்? எது சனாதனம்?” என்ற தலைப்பில் கழக மாவட்ட தலைவர் சாக்கோட்டை இளங்கோவனும், “வைக்கம் போராட்ட வரலாறு” குறித்து கழகப் பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரனும் சிறப்புரையாற்றினார்.

**நிகழ்வில் கழக வார ஏடான “புரட்சிப் பெரியார் முழக்கம்” இதழுக்கான சந்தா ரூ.15,000 பரப்புரைச் செயலாளரிடம் வழங்கப்பட்டது.**




## கொளத்தூரில் “எது திராவிடம்? எது சனாதனம்?” பொதுக்கூட்டம்

தந்தை பெரியாரின் 50வது நினைவுநாள் பொதுக்கூட்டம் கொளத்தூர் நகர கழக சார்பில் 23.12.2023 சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொளத்தூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள கழக செயல்வீரர் இளஞ்செழியன் நினைவரங்கில் நடைபெற்றது.

மேட்டூர் டி.கே.ஆர் இசைக் குழுவின் பகுத்தறிவு இசை நிகழ்ச்சியோடு பொதுக்கூட்டம் தொடங்கியது. இக்கூட்டத்திற்கு சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார் தலைமை தாங்க, கொளத்தூர் நகர தலைவர் சி. ராமமூர்த்தி வரவேற்புரையாற்றினார். திமுக கொளத்தூர் ஒன்றியச் செயலாளர் ம. மிதுன் சக்கரவர்த்தி, கழகத் தலைமைக்குழு உறுப்பினர் காவை. ஈஸ்வரன், மேற்கு மாவட்டச் செயலாளர் சி. கோவிந்தராசு கிழக்கு மாவட்டத் தலைவர் க. சக்திவேல், நங்கவள்ளி ஒன்றியப் பொறுப்பாளர் நங்கவள்ளி கிருஷ்ணன், கிழக்கு மாவட்ட இளைஞரணித் தலைவர் தங்கதுரை, மேட்டூர் நகரச் செயலாளர் சு குமாரப்பா, தி.மு.க. கொளத்தூர் நகரச் செயலாளர் பெ. நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சேலம் மாவட்ட திமுக மாணவரணி அமைப்பாளர் சதாசிவம், கழக தலைமைக்குழு உறுப்பினர் சக்திவேல், மேற்கு மாவட்ட அமைப்பாளர் நங்கவள்ளி அன்பு, தமிழ்நாடு மாணவர் கழக நாகராஜ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கொளத்தூர் ஒன்றிய செயலாளர் சேட்டு குமார், கொளத்தூர் நகரச் செயலாளர் அறிவுச்செல்வன், திமுக தலைமைக் கழகப் பேச்சாளர் பன்னீர்செல்வம் ஆகியோர் கருத்துரையாற்றினர்.

அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தமிழ் மண் தன்னுரிமை இயக்க நெறியாளர் பேராசிரியர் த. ஜெயராமன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

நிறைவாக கொளத்தூர் ப. குமார் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : December 29, 2023

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran